**NOVEMBER/DECEMBER 2020**

**BLI52 — இலக்கியம் 6 — சங்க இலக்கியம் —**
**பகுதி — I**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. 'காமம் காமம் என்ப காமம்' என்ற குறுந்தொகைப் பாடலைப் பாடியவர் யார்? இப்பாடல் யார் கூற்றாக வருகிறது?

2. 'செல்வர் அல்லர்நங் காதலர் செலினும்

   நோன்மார் அல்லர் நோயே' — எனத் தோழி கூற காரணம் என்ன?

3. அகநானூற்றின் சிற்றெல்லை, பேரெல்லைப் பற்றிக் குறிப்பிடுக.

4. 'உழுவையொ டுழந்த உயங்குநடை யொருத்தல்' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?

5. "ஈயா யாயினு மிரங்குவே னல்லேன்

   நோயிலை யாகுமதி..." — என்று மூவன் மன்னரை வாழ்த்திப் பாடியவர் யார்?

6. பரிசல் துறை என்றால் என்ன?

7. ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணை, நெய்தல் திணைப் பாடல்களைப் பாடியவர்கள் யாவர்?

8. ஐங்குறுநூறு நூலைத் தொகுத்தவர் யார்?

9. கிரௌஞ்சம் மலை எங்குள்ளது?

10. முப்பரத்தை எரித்தவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) உலோச்சனார் சிறைப்புறமாக நிற்கும் தலைமகனுக்குத் தோழி கூறுவதை எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) மிளைகிழான் நல்வேட்டனார் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனுக்குத் தோழி வாயிலாக இடித்துரைக்கும் மொழிகள் யாவை?

12. (அ) அகநானூற்றில் தோழி தலைமகற்கு வாயில் மறுத்த மருத்திணைப் பாடல் கருத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) நக்கீரனார் தலைமகற்குக் குறைநேர்ந்து தோழி சொல்லியதை எங்ஙனம் பாடுகிறார்?

13. (அ) 'எத்திசைச் செலினு மத்திசைச் சோறே' — என்று ஔவையார் பாடும் சூழலை விளக்குக.

(அல்லது)

(ஆ) பிசிராந்தையார் 'எம் வேந்தன் கோப்பெருஞ் சோழன்' என்று கூறும் பெருமையை எடுத்துக் கூறுக.

14. (அ) சிறுவெண் காக்கைப் பத்தில் இடம்பெறும் தலைவன் கூற்றுகளை எடுத்துக் கூறுக.

(அல்லது)

(ஆ) சிறுவெண் காக்கைப் பத்துக் காட்டும் தலைவியின் உளப்பாங்கை எடுத்துக் கூறுக.

15. (அ) முருகப்பெருமானின் சிறப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) முருகப்பெருமான் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றத்தின் பெருமையை எடுத்துக் கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

16. குறுந்தொகையில் தலைவி கூற்றுப் பாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

17. அகநானூற்றில் பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதை முல்லைத்திணைப் பாடல் வழி விளக்குக.

18. பெருங்குன்றூர்கிழார் பரிசில் கொடுக்க காலம் நீட்டித்த சேரமான் குடக்கோச்சேரலிரும் பொறையை எங்ஙனம் இடித்துரைக்கிறார்?

19. மறுதரவுப் பத்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

20. குன்றம்பூதனார் தேவசேனை, வள்ளி இருவருக்கும் இடையே ஏற்பட்ட ஊடலை எங்ஙனம் நயம்பட உரைக்கிறார்?

———————